www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# அனைவருக்கும் கல்வி இயக்கம் – தமிழ்நாடு

**மாநில அளவிலான அடைவு ஆய்வு 2016–17**

**வினாத்தாள்**

**312**

**பாடம் : தமிழ்** **வகுப்பு : 3** **மொத்த மதிப்பெண்கள் : 30**

**மாணவர் பெயர் :** ........................................................................................................ **நேரம் : 1 மணி**

**வகுப்பு மற்றும் பிரிவு :** ..................................................................................................................................

**பள்ளியின் பெயர் :** ..................................................................................................................................

**ஒன்றியம்** ........................................................ **மாவட்டம்** ........................................ **பள்ளி எண்** ........................................

---

**1 முதல் 8 வரை உள்ள வினாக்களுக்குச் சரியான விடையினைக் கோடிட்ட இடங்களில் எழுதுக.**


1. சொல்வதைக் கேட்டு எழுதுக.

   ____________

2. சொல்வதைக் கேட்டு எழுதுக.

   ____________

3. படம் பார்த்து நிரப்புக.



   குளக்கரையில் ஒரு ____________ இருந்தது.

4. படம் பார்த்து விடுபட்ட எழுத்தை நிரப்புக.



| | | | | |
|---|---|---|---|---|
| ப | | ப | ர | |

5. படத்தைப்பார்த்து ஒரு சொற்றொடர் எழுதுக.




   ________________________________________

6. 'யானை' என்ற சொல்லைப் பயன்படுத்தி ஒரு சொற்றொடர் எழுதுக.

   ________________________________________

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

7. வட்டத்திலுள்ள ஆறெழுத்துச் சொல்லைக் கண்டுபிடி.




_______________

8. சொற்களைச் சரியாக வரிசைப்படுத்தி எழுதுக.

உதிக்கும் / கிழக்கே/ சூரியன்.

_______________________________

**9 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையினை வட்டமிடுக.**

9. கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தக் குறியினைத் தேர்ந்தெடுத்திடுக.

கோடை விடுமுறை எப்பொழுது தொடங்கும்

a) ! b) ?
c) . d) ,

10. அகரவரிசைப்படி தேர்ந்தெடுத்திடுக.

a) கிளை, கீரை, கண், காது c) கீரை, கிளை, காது, கண்
b) கண், காது, கிளை, கீரை d) காது, கிளை, கண், கீரை

11. வடமொழி எழுத்துக்கள் இடம்பெறாத சொல்லைக் கண்டுபிடி.

a) அஸ்ஸாம் b) குஜராத் c) தமிழ்நாடு d) காஷ்மீர்

12. அடிக்கோடிட்ட சொல்லிற்கு இணையான பொருள் தரும் சொல்லைத் தேர்ந்தெடுத்திடுக
நான் தினமும் **<u>நூல்</u>**களைப் படிப்பேன்.

a) புத்தகம் b) கதை c) கவிதை d) கட்டுரை

13. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடு.

காலை வேளை, பள்ளியில் மணி . . . . . . .

a) ஒழித்தது b) ஒளித்தது c) ஒலித்தது d) ஒளிந்தது

14. 'கரும்பலகை' என்ற சொல்லோடு தொடர்பில்லாதது எது ?

a) ஆசிரியர் b) மாணவர் c) வகுப்பறை d) சமையலறை

15. ஒத்த ஓசையுடைய சொல் இணையைக் கண்டறிக.

a) ஆடு – பாடு b) காடு – ஊர் c) மதி – எடு d) குகை – வீடு

www.Padasalai.Net

16. இப்படத்தில் புத்தகங்கள் உள்ள இடம் . . . . . .



a) மேசையின் கீழ் b) மேசையின் உள்ளே
c) மேசைக்கு வெளியே d) மேசையின் மேல்

17. இரண்டு தொடர்களுக்கும் பொருத்தமான ஒரே சொல்லைத் தேர்ந்தெடுத்திடுக.

இரவில் வானில் தெரிவது,

வார நாட்களில் ஒன்று.

a) ஞாயிறு b) திங்கள் c) விண்மீன் d) சந்திரன்

18. இரு கட்டங்களிலும் விடுபட்ட எழுத்து எது ?

| | | | |
|---|---|---|---|
| | ர | ங் | |
| ல் | | | கை |
| யி | | | |

a) கே b) கூ c) கா d) கு

19. சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்திடுக.

a) குளத்தில் மீன்கள் துள்ளியது. b) குளத்தில் மீன்கள் துள்ளின.
c) குளத்தில் மீன் நீந்தின d) குளத்தில் மீன்கள் நீந்தியது.

20. படத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடு.




a) தீபெட்டி b) தீய பெட்டி c) தீப்பெட்டி d) திப்பெட்டி

21. ‘ நட்சத்திரம்’ என்பதன் பொருளைக் கண்டுபிடி.. . . . . .

a) உலகம் b) விண்மீன் c) சூரியன் d) சந்திரன்

22. ‘புதையல்’ – இச்சொல்லில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு அமையாத சொல்லினைக் கண்டுபிடிக்கவும்.

a) புயல் b) தையல் c) புல் d) புகை

www.Padasalai.Net

**விளம்பரத்தைப் பார்த்து 23 முதல் 26வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்**




23) புத்தகக் காட்சி எங்கு நடைபெறுகிறது ?

a) இராயப்பேட்டை  b) இராயபுரம்

c) இராயக்கோட்டை  d) இராமாபுரம்

24) புத்தகக் காட்சி எத்தனை நாள்கள் நடைபெறும் ?

a) 10  b) 11  c) 13  d) 14

25) புத்தகக் காட்சியில் நடைபெறும் நிகழ்வுகளுக்குள் பொருந்துவது எது ?

a) சொல்லரங்கம்  b) பாட்டரங்கம்  c) கருத்தரங்கம்  d) கவியரங்கம்

26) மாபெரும் புத்தகக் காட்சி எதனை முன்னிட்டு நடத்தப்படுகிறது ?

a) உலகநூலக நாள்  b) ஆசிரியர் நாள்

c) உலக எழுத்தறிவு நாள்  d) உலகப் புத்தக நாள்

www.Padasalai.Net

**பின்வரும் கதையினைப் படித்து 27 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**சிறுத்தையும் மான்களும்**

காட்டில் ஒருநாள் சிறுத்தை பசியுடன் உணவைத் தேடியது. அப்பொழுது ஒரு கருப்புமானையும், புள்ளிமானையும் கண்டது. அவை இரண்டும் மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. இதனைப் பார்த்த சிறுத்தை, எந்த மானைத் தாக்குவது என முடிவு செய்வதற்குள் இரண்டு மான்களும் விரைவாக ஓடின. அவ்வாறு விரைவாக ஓடிய மான்கள், சிறிது தூரத்திற்குப் பிறகு வலது பக்கம் இடது பக்கமாகப் பிரிந்து ஓடின. அந்த இடத்தில் சிறுத்தை, எந்த மானைத் துரத்தலாம் என்று தயங்கி நின்றது. பின்பு, கருப்பு மானின் இறைச்சி சுவையாக இருக்கும் என நினைத்துக் கருப்பு மானைத் துரத்தத் தொடங்கியது. ஆனால் அதற்குள் அது தொலைதூரம் ஓடி மறைந்து விட்டது. ஆகவே சிறுத்தை 'அது வேகமாக ஓடக்கூடிய மான்' என்று கருதியது. பின்பு 'புள்ளி மானையாவது பிடிக்கலாம்' என்று திரும்பிப் பார்த்தது. அதற்குள் புள்ளிமான் வேகமாக ஓடி மறைந்து விட்டது.

27) சிறுத்தை வழியில் கண்ட விலங்கினம் எது ?

a) புள்ளிமான், கவரிமான்
b) புள்ளிமான், கருப்பு மான்
c) புள்ளிமான், வெளிமான்
d) புள்ளிமான், கலைமான்

28) சிறுத்தை மானைத் துரத்தியது ஏன் ?

a) மிகுந்த பசியால்
b) மிகுந்த கோபத்தால்
c) மிகுந்த சோர்வால்
d) மிகுந்த வலிமையால்

29) மான்கள் எங்கு மேய்ந்து கொண்டிருந்தன ?

a) குளத்திற்கு அருகில்
b) மலைக்கு அருகில்
c) மரத்திற்கு அருகில்
d) காட்டிற்கு அருகில்

30) சிறுத்தையால் மான்களைப் பிடிக்க முடியவில்லை ஏன் ?

a) விரைவாக முடிவு எடுக்காததால்
b) காலில் அடிபட்டதால்
c) சோர்வாக இருந்ததால்
d) மான்கள் வேகமாக ஓடியதால்

www.Padasalai.Net